# தென் தமிழீழ மக்களுக்கு டிச. 10 முதல் 20வரை உதவி வழங்குமாறு புலிகள் வேண்டுகோள்

விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 கார்த்திகை 19 ஜு அவ்வல் பிறை: 17 இதழ்: 224

யாழ்ப்பாணம் புதன்கிழமை 5-12-1990

(யாழ்ப்பாணம்)

பல்வேறு வழிகளாலும் பாதிக்கப்பட்ட தென் தமிழீழ மக்களுக்கு டிசம்பர் 10ம் திகதியிலிருந்து 20ம் திகதிவரை வரை உதவி வழங்கும் நாட்களாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமை செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழீழ சிறிலங்காப் போரினால் தென் தமிழீழம் மிகவும் பாதிப்படைந்துள்ளது. சுமார் நாலு லட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர். 4000க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கில் தமிழ்ப்பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்

(4-ம் பக்கம் பார்க்கம்)

குரும்பசிட்டியில்

## புலிகள் தாக்குதல்
## படையினருக்கு பலத்த சேதம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டியில் நேற்று நண்பகல் விடுதலைப்புலிகளுக்கும்- சிறிலங்கா இராணுவத்திற்குமிடையில் நடைபெற்ற மோதலில் படையினர் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது:

நேற்று நண்பகல் 12-30 மணியளவில் குரும்பசிட்டியிலிருந்து ஷெல் தாக்குதலை நடத்தியவாறு முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப்புலிகள் பலத்த தாக்குதலை நடத்தினார்கள்.

(2-ம் பக்கம் பார்க்க)

★ கலைஞர் கருணாநிதி தலைமையிலான

# தமிழக அரசை கலைக்கக் கோரி
# உண்ணாவிரதம்; ஆர்ப்பாட்டம்!

## ஒரு வார காலம் நடாத்த இந்திரா காங்கிரஸ் ஏற்பாடு

(சென்னை)

**கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலான தமிழக மாநில அரசைக் கலைக்குமாறு கோரி தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சியினர் ஒரு வார காலத்திற்கு உண்ணாவிரதம் மற்றும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடாத்தவுள்ளனர்.**

இம்மாதம் 10-ம் திகதியிலிருந்து ஒரு வார காலத்திற்கு தமிழகத்தில் இதற்கான போராட்டம் பெருமளவில் நடைபெறவுள்ளதாக இந்திரா காங்கிரஸின் தமிழ்நாடு கிளை அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்ததைச் சுட்டிக்காட்டியே இக்கட்சியினர் இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளனர். (ரி)

## ஆனையிறவு முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்

(கிளிநொச்சி)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து தினமும் ஷெல் தாக்குதல் இடம்பெற்றுவருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தின் கரையோரப் பகுதியில் பாதுகாப்பு தீவிரம்

(சென்னை)

தமிழகத்தின் கரையோரப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் கரையோரப் பகுதிகளான தஞ்சாவூர்- புதுக்கோட்டை, ராமநாதபுரம் ஆகிய இடங்களில் விசேட பொலிஸ் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்:

தஞ்சாவூரில் இருந்து ராமேஸ்வரம் கடற்கரைப் பிராந்தியம் வரையில் தமிழக அரசின்

(4-ம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரி, பருத்தித்துறை வீதிகளில்

## ஊழியர் நலன் கருதி போக்குவரத்துச் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் பணி புரியும் ஊழியர்களின் நலன்கருதி, பருத்தித்துறை, சாவகச்சேரிப் பாதைகளில் வைத்தியசாலை நிர்வாகம் வெகு விரைவில் தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்திப் போக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி-சஹாய் சந்திப்பு

(புதுடில்லி)

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இந்திய உள்துறை இணையமைச்சர்

(4-ம் பக்கம் பார்க்க)

## நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெறும்

(கொழும்பு)

ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் ஆசிரிய பயிலுநர்களை அனுமதிப்பதற்கான பொது நேர்முகப் பரீட்சை யாழ்ப்

(4ம் பக்கம் பார்க்க)

## இளைஞரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(ஏழாலை)

காணவில்லை எனத் தேடப்பட்டவர் கிணற்றுள் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

மல்லாகம் நீதிமன்ற வீதியைச் சேர்ந்த தம்பிமுத்து சந்திரகாந்தா (வயது 20) என்ற இளைஞரின் சடலமே

(4ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்கள் ஒய்வூதிய சம்பள இலக்கம் பெறமுடியாது தவிப்பு

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் பலருக்கு ஒய்வூதியச் சம்பளம் பெறுவதற்கான இலக்கம் வழங்கப்படாதிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது:

இந்த இலக்கத்தைப் பெறுவதற்காக எத்தனையோ ஆசி

(4-ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை வ. போ. ச. உயர் அதிகாரிகள் ஒய்வு பெற்றனர்

(வடமராட்சி)

பருத்தித்துறை வடபிராந்திய போக்குவரத்து பஸ்டிப்போவின் உயர்அதிகாரிகள் பலர் திடீரென ஒய்வு பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

மேற்படி பஸ்டிப்போ கடந்த காலத்தில் பெரும் கஷ்டத்தின் மத்தியில் கடமையாற்றி வந்ததுடன் வடமராட்சியில் கஷ்டமான காலத்திலும் பெரும் சேவையாற்றி வந்தது குறிப்பிடத்தக்கது.

மேற்படி டிப்போவில் கடமை செய்த உத்தியோகத்

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ். ஆஸ்பத்திரியில்

## மருந்து தட்டுப்பாட்டினால் நோயாளர் பெரும் பாதிப்பு

(நல்லூர்)

யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் நோய்க்கு தேவையான மருந்துகளின்றி அவல நிலைக்குள்ளாகியுள்ளனர்.

வாட்டில் இருந்து வெளியேறும் நோயாளர்கள்கூட தமக்குத்தேவையான மருந்து வகைகளை வெளியிலேயே பெற்றுக்கொள்ளும்படி துண்டு எழுதிக் கொடுக்கப்படுகின்றது. வெளிநோயாளர் பகுதியிலும் இவ்வாறே வெளியில் பெற்றுக் கொள்ளுமாறும் துண்டுகொடுக்கப்படுகிறது.

காயங்களுக்கு மருந்து கட்டுவதற்கு மருந்து கட்டும்பகுதியில் பண்டேஜ்மற்றும் தேவை

(4ம் பக்கம் பார்க்க)

## வேலணையிலும் மருந்துகளின்றி நோயாளர் பாதிப்பு

(வேலணை)

வேலணை அரசினர் வைத்தியசாலையில் வயிற்றோட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் கண்நோய்களைக் கட்டுப்படுத்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### போட்டோஸ்ரட் பிரதி

தரமான போட்டோஸ்ரட் பிரதிகள் எல்லா வகையான அளவுகளிலும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவில் அருகில், யாழ்ப்பாணம். (ஏ 910)

### சனசமூக நிலையங்களுக்கு

மீரா வெளியீடுகள் 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னுகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர். (சி-4156)

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளிற்கு விசேட கழிவு உண்டு) "மண்டேலா ரேடர்" இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர்; "அரஸ் ஜவுளியகம்" 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (சி-4158)

### புத்தகம்

திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைப் பாடல் புத்தகம். 10 மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் அல்லது 10 மில்க்வைற் சலவைப் பவுடர் சிறிய வெற்றுப் பைகளை அனுப்பி அல்லது நேரில் கொடுத்துப் பெற்றுக்கொள்ளவும். மில்க்வைற், யாழ்ப்பாணம். (எ-912)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# சாம்பல்தீவு, நிலாவெளி மக்கள் சொந்த இடம் திரும்புகின்றனர்

(மாங்குளம்)

வடபகுதியில்தஞ்சமடைந்த சாம்பல்தீவு, நிலாவெளிப் பகுதி மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றனர்.

திருமலை அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களும் அவர்களது சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றனராம்.

சாம்பல்தீவு, நிலாவெளிப் பகுதிகளில் இராணுவம் வெளியேறிவிட்டதாகவும் தற்பொழுது அப்பகுதிகளில நிலைமை ஓரளவு சீரடைந்து வருவதாகவும், தமக்கு விடுதலைப் புலிகள் ஆதரவும், உதவியும் வழங்கி வருவதாகவும் அப்பகுதிக்குச் சென்று நிலைமையை அவதானித்து வடபகுதிக்கு வந்து தமது குடும்பங்களைக் கூட்டிச் செல்வோர் தெரிவித்தனர். (150)

## போரூட் உதவி

(மாங்குளம்)

பருத்தித்துறை போரூட் நிறுவனம் புலோலி மேற்கு பாடசாலைகளில் கல்விபயிலும் ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி வழங்கத் தீர்மானித்துள்ளது.

அண்மையில் சிறுவர், பெற்றோர் சங்கத் தலைவி திருமதி லோ. சிவகேதுராணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போது வசதியற்ற ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியை வழங்க போரூட் நிறுவனம் முன்வந்துள்ளது.

இக்கூட்டத்திற்கு போரூட் நிறுவன அதிகாரிகள்இப்பகுதி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க சமாஜத் தலைவர் மற்றும் பெற்றோர்கள், பலரும் கலந்துகொண்டனர். (150)

## கட்டாக்காலி தொல்லை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியில் கட்டாக்காலி ஆடு, மாடுகளால் மக்கள் சொல்லொணு துயரங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். மேலும்வீட்டுத்தோட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களின் வளவினுள் இரவு நேரம் உட்புகுந்து அங்குள்ள பயிர்களை நாளாந்தம் அழித்துவருவருகின்றன.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியின் மத்தியில் தங்களது அன்றாட தேவைகளை பூர்த்திசெய்யும் வகையில் பயிரிட்டிருக்கும் பயிர்களை அழித்து வரும் இந்த கட்டாக்காலி ஆடு, மாடுகளை ஒழிப்பதற்கு யார்தான் முன்வருவார்களோ என பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றார்கள். (101)

# வீட்டு தோட்ட விதைகளை ஆய்வு நிறுவனம் வழங்கும்

(மாங்குளம்)

ஆடு, மாடு போன்ற கால்நடைகளைக் கட்டி வளர்க்க வேண்டும். கட்டாக்காலிஆடு, மாடுகளைப் பிடித்துக் கட்டவும், பயிரழிவு, பிடிகூலி, தண்டம் ஆகிய விதித்து அறவிடும் உரிமை உற்பத்திக்குழுவிற்கு உண்டு.

இவ்வாறு விடுதலைப்புலிகள் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற தமிழீழ ஆய்வு நிறுவன உற்பத்திக் குழுக் கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் திரு. கலியுகவரதன் தலைமையில் நடைபெற்ற உற்பத்திக் குழுக் கூட்டத்தில் கிளிநொச்சி மேற்கு சிற்றூரவைகளைச் சேர்ந்த உற்பத்திக் குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

காணிச் சொந்தக்காரர்கள் தமது காணிகளைத் திருத்தி உடனடியாக உணவுற்பத்தியில் ஈடுபடவேண்டும்: உணவுற்பத்தி செய்யப்படாதிருக்கும் காணிகள் சுவீகரிக்கப்பட்டு உணவுற்பத்தியில் ஆர்வமுள்ளவர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும்.

அத்துடன் வீட்டுத்தோட்டத்திற்கு வேண்டிய நல்லின பாகல், கத்தரி, பயித்தை, புடோல், கீரை விதைகளை நியாயவிலையில் ஆய்வு நிறுவனத்தால் மக்களுக்கு வழங்கப்படும்.

கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் உரியவர்கள் வந்துபணம் செலுத்தித் தமது கால்நடைகளைப் பெறவேண்டும். தவறினுல் 10 நாட்களில் ஏலத்தில் விற்பனை செய்விக்கப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (150)

## அக்கரைப்பற்று பஸ் விபத்தில் 40 பேர் காயம்

(அக்கரைப்பற்று)

கொழும்பில் இருந்து அக்கரைப்பற்று சென்றுகொண்டிருந்த தனியார் பஸ், அக்கரைப்பற்றில் விபத்துக்கு உள்ளாகியதில் 40 பேர் காயம் அடைந்தனர். ஐவர் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இவ்விபத்து நேற்று முன் தினம் நிகழ்ந்தது. (ச)

### குரும்பசிட்டியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலினுல் நிலைகுலைந்த இராணுவத்தினர் இழப்புகளுடன் தமது முயற்சியை கைவிட்டு பின்வாங்கிச் சென்றுர்கள்.

### வீமன்காமத்தில்

இதேவேளை நேற்று நண்பகல் 1-30 மணியளவில் வீமன்காமம் பகுதியில் புதிய பாதுகாப்பு அரண் ஒன்றை அமைப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருந்த இராணுவத்தினர் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தினுர்கள்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலையடுத்து பாதுகாப்பு அரண் அமைக்கும் முயற்சியைக் கைவிட்டு இராணுவத்தினர் முகாம் திரும்பினுர்கள். (வி-து)

# சைக்கிள் திருட்டு அதிகரிப்பு மக்களுக்கு எச்சரிக்கை

(காங்கேசன்துறை)

மருதனமடம், உடுவில் பகுதியில் சைக்கிள் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் பொதுமக்கள் பீதியடைந்துள்ளனர்.

அண்மைக்காலமாக இப்பகுதியில் பலரது சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட இரு திருட்டுப் பேர்வழிகள் விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் தமது சைக்கிள்களை அவதானமாக வைத்திருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (86)

## இராசி பலன்

05-12-1990
புதன்கிழமை

திருதியை மு. ப. 7-44வரை சதுர்த்தி அதிகாலை 5-43வரை, புனர்பூசம் முன் இரவு 10-13 வரை, இராகுகாலம் பகல் 12-16 முதல் 1-46 வரை, நல்ல நேரம் மாலை 4-46 முதல் 6-16 வரை.

மேடம்-எதிர்பார்த்த காரிய வெற்றி, தொழில் சிறப்பு, அறிஞர் சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, புகழ்.

இடபம்-காரியத் தாமதம், கொடுக்கல் வாங்கல்பிணக்கு, நற்செய்தி, தொழில்குறைவு, குடும்பக் கஷ்டம்:

மிதுனம்- புதிய ஸ்தானம், கல்வியால் மேன்மை, பயணம், குடும்பக்கௌரவம், புத்திரர் பெருமை.

கடகம்-இனசன பகை, வீண் சந்தேகம், அரசியல்குரோதம். குடும்பத்தில் செலவு.

சிங்கம்-தொழில்லாபம், அதிகாரிகள் பாராட்டு, அந்நியர் உதவி, குடும்பத்தில்ஒற்றுமை.

கன்னி - எதிரணி வாதம், தொழில் கஷ்டம், குடும்பத்தில் அமைதி, அந்நிய வாசம்

துலாம்-கடும்போக்கு. அதிகார மமதை, தொழில் நஷ்டம், குடும்பத்தில் மோதல்.

விருச்சிகம்-பலாத்கார நடவடிக்கை, தொழில்பிணக்கு, ஏமாற்றம், குடும்பத்தில் பகைமை.

தனுசு-தடுமாற்றம், குடும்ப நன்மை, புத்திரர் செலவு, பொதுத்துறை ஈடுபாடு, மகிழ்ச்சி.

மகரம்-பொருளாதார மேம்பாடு, பயணங்களால் காரிய பலிதம், குடும்பத்தில் சுபகாரியம், அதிகாரிகள் சினம்.

கும்பம்-சிறு பிணி, அந்நியர் தொல்லை, வைத்தியச் செலவு, கடமை தவறுதல், அசதி.

மீனம்:கருத்து மோதல், தொழில் கஷ்டம், நண்பர் கவலை, கடன்படல், மனச்சுமை.

ஜோஸ்யர்.

# பங்கீட்டு அட்டை விநியோகம் பூர்த்தி

(காங்கேசன்துறை)

வலி. வடக்கில் தையிட்டி வடக்கு, தெற்கு, கிழக்கு, மயிலிட்டி வடக்கு, மாவிட்டபுரம் தெற்கு ஆகிய பிரிவுகளில் பங்கீட்டு அட்டை விநியோகம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக கிராமசேவை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பிரிவுகளிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு அவர்கள் பங்கீட்டு அட்டை கிடைக்கும் என்பதால் அப்பகுதி கிராம சேவை அலுவலர்களை அணுகுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமசேவை அலுவலர்கள் ரி. இராஜபாலன், க. இராசதுரை, எஸ். சண்முகநாதன் ஆகியோரே மேற்படி கிராம சேவையாளர்களின் பிரிவுகளின் வேலைகளைமேற்கொண்டு பூர்த்திசெய்துள்ளனர். (86)

# கடை உரிமையாளருக்கு ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் அனுமதியின்றி மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குறிப்பாக பெரியகடைப்பகுதிகளில் பாதிப்படைந்த கடைகள், கட்டிடங்கள் என்பவற்றில் உடனடியாகத் திருத்த வேலைகளை ஆரம்பிக்க வேண்டாமெனவும், அவ்வாறு மேற்கொள்வதாயின் உரிய வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு மாநகர சபையின் அனுமதி பெற்றபின்பே திருத்தவேலைகளை ஆரம்பிக்குமாறும் யாழ். மாநரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் கேட்டுள்ளார்.

விமானத்தாக்குதல் காரணமாகச் சேதமடைந்த கடைகள், கட்டிடங்கள் என்பன தற்போது திருத்தப்பட்டுவருவதனை அடுத்தே ஆணையாளர் மேற்கண்ட உத்தரவை வர்த்தகப் பெருமக்களுக்கு விடுத்துள்ளார். (க)

## காரியாலயம் திறப்பு

(மாங்குளம்)

அல்வாய் வடக்கிற்கான தமிழீழ விடுதலைப் புலிகளின் சிற்றூரவைக்காரியாலயம்அல்வாய் வடக்கு நாவலடிச் சந்தியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. (150)

## வயிற்றோட்ட நோய் 5,000பேர் பாதிப்பு

(கொழும்பு)

மாத்தளை மாவட்டத்தில் பரவிவரும்வயிற்றோட்டநோய் மகாவலிப் பகுதிக்கும் பரவி வருவதாக அறிவிப்பட்டுள்ளது. இந்நோயால் இதுவரை இரத்தோட்டை, மாத்தளைப் பகுதிகளில் 5,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ச)

உ

## ஆசார்யாபிஷேக அழைப்பு (குருப்பட்டம் தரித்தல்)

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமதூத வருஷம் கார்த்திகை மாதம் 20-ம் திகதி (6-12-1990) வியாழக்கிழமை பூச நட்சத்திரமும், மகரலக்னத்தில் பஞ்சமி திதியும் அமிர்தசித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 9-45 தொடங்கி 11-00 மணி வரையிலான சுப முகூர்த்த வேளையில்:

பிரம்மஸ்ரீ ப. சிவஞானசுந்தரக் குருக்கள்
அவர்களின் புத்திரனும்

பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள்
அவர்களின் மாணவனுமாகிய

**பிரம்மஸ்ரீ கிருபானந்த சர்மா**
(யாழ். அரசடி பிள்ளையார் கோவில் அர்ச்சகர்)
அவர்களுக்கு

யாழ். மணிக்கூட்டுவீதி, அரசடி பிள்ளையார் சன்னிதானத்தில் ஆசார்யாபிஷேகம் செய்ய விநாயகப் பெருமான் திருவருள் முன்னிட்டு நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் உறவினர்களும், அடியார்களும் அன்பர்களும் வருகைதந்து வைபவத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

ஆசார்யாபிஷேக குரு:
பிரதிஷ்டா கிரியா கலாமணி
சிவஸ்ரீ பூ. பரமசாமிக் குருக்கள்
(கோப்பாய் - யாழ்ப்பாணம்)

இங்ஙனம்
பிரம்மஸ்ரீ சிவஞானசுந்தரக் குருக்கள்
82, மணிக்கூட்டு வீதி.
யாழ்ப்பாணம்.

(எ-909)

## பல(ப்) பரீட்சைகள்

தகுதி தரங்களை மதிப்பிட்டு பதவிவழங்குவதற்கு உலகெங்கும் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன.

நமது நாட்டிலோ, பரீட்சைகளுக்குத்தோற்றுவதற்கே பல்வேறு தடைகளை இட்டு தமிழினத்தை மட்டும் தட்டுவதற்கு இலங்கை அரசு காலாகாலமாக பல சோதனைகளை நடாத்தி வந்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த மற்றைய ஏழு மாகாணங்களிலும், பெருமளவில் பெரும்பான்மை இனத்து இளசுகள் மட்டுமே இம்முறை க.பொ.த. (சாதாரண) பரீட்சை எழுதுவதற்கு எமது நாட்டு அரசியல், இராணுவ கெடுபிடி என்ற பிரத்தியேக சூழல் வாய்ப்பளித்துள்ளது. அவர்கள் இன்று பரீட்சை எழுதிக்கொண்டிருக்கின்றார்கள்.

இதேவேளையில், வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகள் பல அகதிகள் முகாம்களாகவும், இராணுவ முகாம்களாகவும் மாறியுள்ளதுடன், தமிழ் மாணவர்கள் இராணுவ கெடுபிடிகளுக்கு உட்பட்டு வாழ்வா? சாவா? என்ற விஷப்பரீட்சைகளுக்கு அடிக்கடி தோற்றி வருகின்றனர்.

1956-ம் ஆண்டுமுதல் தமிழன், தானும் ஒரு இலங்கையன்என்ற தேசபக்தியுடன் அரசதொழில்தேடி உரிய தகுதியுடன் போனால் உத்தியோக மொழித் தகுதி கேட்டு புறக்கணிப்பு! உயர்கல்வி பெறுவதற்கான அடிப்படைத் தகுதிப் புள்ளிகள் பெற்றும் பல்கலைக்கழகம்புக விரும்பினால் தரப்படுத்தல் என்ற தடைபோட்டு தட்டிக்கழிப்பு!-இன்றோ ஆகக்குறைந்த அடிமட்டக் கல்வித் தகுதியான க. பொ. த.(சாதாரண) பரீட்சைக்கு தோற்றுவதற்கே வசதிவாய்ப்பற்று தமிழ் இளம் சந்ததியினர் தவிக்கவேண்டியுள்ளது.

இலங்கை சுதந்திரம் அடைந்தகாலம் முதல், சிங்கள அரசுகள் தமிழ் இனத்துக்கென பிரத்தியேகமாக வைத்த (பரீட்சைகள்) சோதனைகளோ எண்ணிலடங்கா!

பாராளுமன்றத்தில் அரங்கேறிய வாக்குவாத பரீட்சைகள், நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்பட்ட வழக்குத் தேர்வுகள், அரச-திணைக்களங்களின் துணைப்பரீட்சைகள் உட்பட, அரசியல் பொருளாதார கல்வித்துறை போட்டிப்பரீட்சைகளில் தமிழினத்தை எப்படியும் 'பெயிலாக்க' வேண்டும் என்று அரசு திட்டமிட்டு செயற்பட்டபோதிலும் அவை அனைத்திலும் அது தோல்விகளையே சந்தித்துள்ளது.

பல்வேறு துறைகளிலும் திட்டமிட்டுவைத்த அத்தனை சோதனைகளிலும், சோடைபோகாத தமிழினம் பத்தாண்டு காலம் நடைபெறும் ஆயுதபலப் பரீட்சையிலும் நிச்சயம் 'சோடை' போக மாட்டாதுஎன்பது அண்மைக் காலப் போர்க்களப் பரீட்சை முடிவுகள் தெட்டத்தெளிவாக்கி வருகின்றன.

— மயூரன்

# ஆர்ஜன்ரீனு சதிப்புரட்சி இராணுவத்தால் முறியடிப்பு

## கடும் யுத்தம் நடைபெற்றது

(புவனஸ் அயஸ்)

ஆர்ஜன்ரீனுவில் திடீர் சதிப்புரட்சி ஒன்றைமேற்கொண்டு அதிபர் திரு. கார்லோஸ்மேனனின் ஆட்சியைக் கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டது.

முன்னாள் கேர்ணல் அலி தலைமையிலான இராணுவ எதிர்ப்புக் குழுவொன்றே சதிமுயற்சியை மேற்கொண்டு தலைநகரில் சில முக்கிய கட்டிடங்களையும் சில இராணுவ முகாம்களையும் வானொலிநிலையத்தையும் நேற்று முன்தினம் அதிகாலை கைப்பற்றியது.

எனினும் அரசுப் படைகள் எடுத்த துரித நடவடிக்கையால் கடும் யுத்தத்தின் பின் சதிப்புரட்சி முறியடிக்கப்பட்டதுடன் எட்டு புரட்சிப்படையினரும் கொல்லப்பட்டுள்ளனர், பலர் படுகாயமடைந்தனர்.

புரட்சியில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டுமுள்ளனர். கடந்த 87-ம் ஆண்டிலும் இவ்வாறான முயற்சி ஒன்றில் இராணுவ கேர்ணல் ஒருவர் ஈடுபட்டதும் அது முறியடிக்கப்பட்டதும் தெரிந்ததே. (கி)

## அமெரிக்கா வேண்டுகோள்

(லண்டன்)

வளைகுடா பிரச்சனைக்குத் தீர்வை ஏற்படுத்த விரும்பும்போது ஈராக் பாலஸ்தீன பிரச்சனையை முன் வைக்கக்கூடாதென அமெரிக்காவேண்டுகோள் விடுத்துள்ளது.

அமெரிக்கா ஈராக்குடன் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைக்கு தீர்வுகாண விரும்புகிறது. பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனை விதிப்பதை அமெரிக்கா விரும்பவில்லையென அமெரிக்க வெள்ளை மாளிகை பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச)

## ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

லங்கா ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியின் திருத்த வேலைகள் ஓரளவு முடிவுற்று விரிவுரைகள் மீண்டும் 3-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறுகின்றது என நிர்வாகம் அறிவித்துள்ளது.

### ஹெற்றேய் விமான நிலைய

# ஓடுபாதையில் விமானவிபத்து 19 பேர் பலி; பலர் படுகாயம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் ஜெற்றேய் விமானநிலைய ஓடுபாதையில் இருவிமானங்கள் மோதியதில் பத்தொன்பது பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கதிகமானோர் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூர் சேவையில் ஈடுபடும் போயிங் விமானம்ஒன்று புறப்படும்போது தரித்துநின்ற விமானமொன்றுடன் மோதியதில் இவ்விபத்து நிகழ்ந்துள்ளது.

பலத்த சத்தத்துடன் இவ்விபத்து இடம்பெற்றதாக விமான நிலையத்தில் நின்ற பலர் தெரிவித்தார்கள். தரித்துநின்ற விமானத்தின் பெரும்பகுதி வெடித்துச் சிதறியதாகவும் அருகில் நின்ற சில விமானங்களும் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## ரெயில்வே பென்ஷன் வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

ரெயில்வே பென்சன்காரர்களின் செப்ரெம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களின் பென்ஷன் வவுச்சர்கள் காசோலைகள் யாழ். செயலகத்திற்கு நேற்று வந்துள்ளது. இம்மாதம் 12ம் திகதி வரை மேற்படி பென்ஷன் வவுச்சர்களை ரெயில்வே பென்ஷன்காரர்கள் யாழ். செயலக பொதுசன உறவு அதிகாரி அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். (153)

### மார்ச் வரை

# அவகாசம் தருமாறு குவைத் கோரிக்கை

(பாக்தாத்)

வளைகுடாவில் எழுந்துள்ள சிக்கலை பேச்சுவார்த்தைமூலம் தீர்க்க மார்ச் மாதம் வரை கால அவகாசம் தருமாறு அமெரிக்காவிடம் குவைத் அதிபர் கோரியுள்ளார்.

குவைத்திலுள்ள பணயக் கைதிகள் குறித்தும் ஏனைய விவகாரம் குறித்தும் இக்காலப்பகுதியில் அமெரிக்காவுடன் பேசவும் குவைத் முன்வந்துள்ளது.

எனினும் இது குறித்து அமெரிக்காவின் பதிலெதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை. குவைத்தின் இக்கோரிக்கையை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளாதெனஅவதானிகள் தெரிவித்துள்ளனர். 1991 ஜனவரி 15-ந் திகதிக்கு முன் குவைத்திலிருந்து ஈராக் வெளியேற வேண்டுமென ஐ. நா. சபை அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## முத்திரை தட்டுப்பாடு

[பருத்தித்துறை]

வடமராட்சிப்பகுதியில் முத்திரைகளுக்குப் பெரும் தட்டுப்பாடேற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பலத்த கஸ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஒரு சில தனியார் கடைகளில்பலமடங்கு விலைகொடுத்து முத்திரைகளை வாங்கவேண்டிய அவலநிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். [52]

### வேலணை, மருதங்கேணியில்

# 10,000 குடும்பங்களுக்கு ஜனசக்தி நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

ஜனசக்தி இரண்டாம் கட்ட நிவாரணத்தில் வேலணை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பத்தாயிரம் குடும்பங்கள் ஜனசக்தி நிவாரணம் பெறத் தகுதியுடையதாகச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இவர்களுக்கான ஜனசக்திச் சான்றிதழ்கள் இவ்வாரம் வழங்கப்படும். (ச)

## மாணவர் சிந்தனைக்கு!

- ★ இனம்- தனித்துவங்களைக் கொண்டது, அர்த்தமுள்ளது. பாதுகாக்கப்படாவிட்டால் அழியக் கூடியது.
- ★ வாழ்க்கை- உணவும் உடையும் போகமும் அல்ல: உரிமையும் கடமையும் பொறுப்புமாகும்.
- ★ பிரச்சனை- எதிர்கொள்ள பின்நோக்கும், ஓடி மறையமுன் நிற்கும்.
- ★ கல்வி - சுயநலத்தால் ஓடித் தப்புவதற்கு அல்ல; சமூகத்தைத் தேடித் திருத்துவதற்கு.
- ★ அறிவு - ஆக்கத்தை அளிப்பது மட்டுமல்ல. அநியாயத்தை அழிப்பதும்.
- ★ போராட்டம் - கூர்ப்பின் முதற்படி ஆயினும் கொடுமைக்குக் கொடுக்கும் அடி.
- ★ ஒற்றுமை - திரண்டால் மிடுக்குத் தான். ஆனால் மிடுக்குள்ள இடத்தில் திரள்வதே நடைமுறை.
- ★ சுதந்திரம்- தனிமனித நோக்கில் நியாயம்: ஆனால் சமூக நோக்கில் தருமம்.
- ★ உயிர்- உள்ளவரை இசைவைக் கொடுப்பதற்கு அல்ல நியாயமான இசைவால் உயிர்த்திருப்பதற்கு.
- ★ இறப்பு- நிச்சயமாக்கப்பட்ட முடிவு. நியாயமாக்கப்பட்டால் வரலாறு.
- ★ கட்டுப்பாடு- அநியாயத்தை நோக்கியது அடக்குமுறை: நியாயத்தை நோக்கியது வாழ்க்கை நெறி.
- ★ சிந்தனை- சுதந்திரமானது அறிவு அனுபவத்திற்கு ஒத்தது சுயநலம் நோக்காயின் வேதனை.
- ★ பேச்சு- எண்ணத்தின் சிதறல், நியாயப்படுத்தல் அல்ல காலத்திற்கு ஏற்ற சமூக விழுமிய வெளிப்பாடு.
- ★ பாதுகாப்பு- உயிரை உடலுடன் ஒட்டவைப்பது அல்லது உயிருக்கு உரிமையைக் கொடுப்பதும்.
- ★ அகதி- அடைக்கலம் தேடி ஓடுபவன் மட்டுமல்ல அடிமையாய் தாய்நாட்டில் வாழ இணங்குபவனும்.
- ★ விமர்சனம்- ஆரோக்கியமானது. ஆனால் வெறும் வாய் சப்புவதாயின் அசிங்கம்.
- ★ முதிர்ச்சி- கால வயதால் ஏற்படுவது அல்ல. காலத்தைக் கடந்த செயலின் விளைவு.
- ★ மாணவன்- விதை நெல் தான். விதைநிலம் பறிக்கப்பட்டால் வீறு கொண்ட வேங்கை.

ஆசிரியர் இ. திலகரட்ணம்

(புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாமே உதவவேண்டும்

(மாங்குளம்)

இந்தியா, கொழும்பு மற்றும் வெளிநாடுகள் என்று தூரஇடங்களுக்கு ஓடிப்போனவர்களைவிட எமது பிரதேசத்தில் நிரந்தரமாகத் தங்கியிருப்பவர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இங்கு தங்கியிருப்பவர்களுக்கு எந்த நாடும், எந்த நிறுவனங்களும் உதவி செய்வது குறைவு. இவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பு எம்மைச் சேர்ந்தது.

இவ்வாறு வவுனியா கணேசபுரம் மக்கள் மத்தியில் பேசும்போது வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியற் பொறுப்பாளர் திரு. ஞானம் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது, தமிழீழத்து மக்களின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்குடனேயே நாம் அத்தியாவசியச் சேவைக்குழுவை உருவாக்கினோம். பொருளாதாரம், பணத்தட்டுப்பாடு ஆகியவற்றை நிவர்த்திசெய்யும் முகமாக நாம் மேலும் பல திட்டங்களைச் செயற்படுத்திக்கொண்டிருக்கின்றோம்.

இலங்கையில் தனிநிர்வாகம் நடைபெறுகிறது, தமிழீழத்தில் எம்மால் தனி நிர்வாகம் நடாத்தப்படுகின்றது. இந்த நிலையில் தமிழீழத்து மக்களைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருந்து அவர்களின் கஷ்டங்களைப் போக்கும் பொறுப்பை நாம் ஏற்றுள்ளோம்.

எமது சொந்த மண்ணைச் சுதந்திரப் பூமியாக மீட்டெடுப்பதற்குத் தமிழீழ மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார். (150)

# அஸாமில் கடும் யுத்தம் இராணுவத்திற்கு சேதம்

(லக்னோ)

அஸாம்மாநிலத்தில் இயங்கி வரும் அஸாம் விடுதலை முன்னணி உறுப்பினர்களுக்கும், இராணுவத்தினருக்குமிடையில் கடும் சண்டை நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் போராளிகள் அடர்ந்த காடுகளில் தமது முகாம்களுக்கு வெகுதொலைவில் கண்ணி வெடிகளைப் புதைத்து வைத்திருப்பதால் இராணுவம் இழப்பின்றி முன்னேறுவது கஷ்டமாக இருப்பதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சண்டை நீடித்து வருவதால் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் அகதிகளாக வெளியேறிக் கொண்டு இருக்கின்றனர்.

இதேவேளையில் இராணுவம் தாம் போராளிகளின் முகாம்களை அழித்து 220 போராளித் தலைவர்களைக் கைதுசெய்திருப்பதாக அறிவித்துள்ளனர்.

அஸாம் மாநிலம் தேயிலைக்குப் பெயர் பெற்றது. இங்குள்ள தேயிலைத் தோட்டங்களை நிர்வகித்துவரும் வெளி மாநிலத்தவரை அஸாம் விடுதலை முன்னணி மாநிலத்தை விட்டு வெளியேற்றியுள்ளதால் அநேக தோட்டங்கள் மூடிக் கிடக்கின்றன.

அஸாம் விடுதலை முன்னணியினரின் நடவடிக்கைகளை மாநில அரசு கட்டுப்படுத்தாமையால் மாநில அரசு கலைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ச)

## ஆனையிறவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவுப் பகுதியில் விமானத் தாக்குதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தாழப் பறக்கும் ஹெலிகொப்டர், கண்டபடி வேட்டுகளைத் தீர்த்துவருகிறது. (85)

## ஆசிரியர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி

ரியர்கள் தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், விவாகப் பதிவுப் பத்திரம், பிள்ளைகள், மனைவி ஆகியோரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் அனுப்பிவைத்தும் இதுவரை அந்த ஆசிரியர்களுக்கு ஒய்வூதிய இலக்கம் கிடைக்கவில்லை.

சுமார் 30 வருடங்களுக்கு மேலாகச் சேவை செய்த 55 வயதிற்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்குக்கூட இந்த ஒய்வூதியச் சம்பள இலக்கம் வழங்கப்படவில்லை.

இந்த இலக்கத்தைப் பெற்றுத்தர மேலதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (139)

# கிளிநொச்சி விவசாய பீடம் விவசாயிகளுக்கு உதவும் வகையில் இயங்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

"யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம் கிளிநொச்சி பிரதேச விவசாயிகளுக்கு சகல விதத்திலும் உதவக்கூடியவகையில் இயங்கவேண்டும்" என்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. அ. துரைராஜா நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் விவசாயபீடத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது.

யாழ். பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் விவசாயபீடத்தைத் திறப்பது ஒரு முக்கிய நாளாகும்.

கிளிநொச்சி பிரதேசத்தின் நிலவளம், நீர்வளம், வனவளம் கால்நடைவளம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் விவசாய பீடம் முன்னோடியாக விளங்கவேண்டும். இந்த பீடம் விவசாயிகளுக்கு உதவக்கூடிய வகையில் விவசாயம் சம்பந்தமான ஆராய்ச்சிகளிலும் ஈடுபட முன்வரவேண்டும் என்றார்.

இவ்விழாவில் கிளிநொச்சி அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர், யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி வி. கே. கணேசலிங்கம், விவசாய பீட நலன் விரும்புவோர் சங்கப் பிரதிநிதி திரு. எஸ். வைத்திலிங்கம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

விவசாய பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட இருபத்தாறு மாணவர்களில் பன்னிரண்டு மாணவர்களே நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் ஆரம்பமான விவசாய நெறி விரிவுரைகளுக்கு சமூகமளித்திருந்தனர். (153)

## யாழ். ஆஸ்பத்திரியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யான எந்தவிதமான பொருள்களும் மிகக்குறைவாகவேயுள்ளது. மருந்து கட்டுவதற்கு நோயாளர்களே வீட்டிலிருந்து துணிகொண்டுவரும்படி மருந்து கட்டுபவர்களால் பணிக்கப்படுகின்றனர்.

ஆஸ்பத்திரியில் பெற்றுக்கொள்ளமுடியாத மருந்து வகைகளை வெளியில் மருந்துச்சாலைகளில் பெற்றுக்கொள்ளவும் முடியாதுள்ளது. ஆஸ்பத்திரி நிலையே தங்களுக்கும் என மருந்து விற்பனையாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

## வேலணையிலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துவதற்குமான மருந்துகள் எதுவும் இன்றி வைத்திய சாலை இயங்கிவருகின்றது.

இவ்வைத்திய சாலையில் வயிற்றுப்புண்களை மாற்றுவதற்கான மருந்துகள் உட்பட விட்டமின் சத்துக்கள் எதுவும் இல்லாததால் இப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகிறார்கள்.

ஏற்கனவே இவ்வைத்திய சாலை தரம்குறைந்த வைத்திய சாலையாக இயங்குவதால் அரசாங்கத்தால் கொடுக்கப்படும் மருந்து விநியோகங்களும்குறைவு. ஆனால் நாளாந்தம் நோயாளர்களின்வரவு அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நவாலியில் — நெல் நாற்று திருட்டு விவசாயிகள் பாதிப்பு

(வட்டுக்கோட்டை)

நள்ளிரவு நேரத்தில் வயல் பகுதிகளில் நெல் நாற்றுக்கள் திருடப்படும் சம்பவங்கள் பரவலாக நடைபெற்று வருகின்றன.

கடந்த வாரம், நவாலி மேற்கு ஈச்சந்தரவை வயற் பகுதியில் பெருந்தொகையான நெல நாற்றுக்கள் திருடப்பட்டுள்ளதாக இப்பகுதி நெற் செய்கையாளர்கள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.

கஷ்டமான இக்காலகட்டத்தில் பெருந் தொகையான பணத்தைச் செலவு செய்து வயலை உழுது, விதைத்துப் பாதுகாத்துவந்த இந்த நெற்செய்கையாளர்கள் தமக்கு ஏற்பட்டுள்ள இந்தநிலை தொடர்ந்தும் நடைபெறாது இருக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவிக்கின்றனர். (139)

## பாவிக்கமுடியாத வாகனங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மோட்டார் வாகன பதிவுத்திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் எதுவும் பாவிக்க முடியாத நிலையில் செயல் இழந்திருப்பின் அந்த வாகனத்தை பாவிக்கமுடியாத காரணங்களை விளக்குவதற்கான படிவத்தை இம்மாதம் 31-ந் திகதிக்கு முன்பாக பூர்த்திசெய்து சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்களம் கோரியுள்ளது.

மேற்படி கால எல்லைக்குள் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (153)

## சாவகச்சேரி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வரத்து வசதிகளைச் செய்ய உள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலையில் 900 ஊழியர்கள் கடமையாற்றுகிறார்கள். 400 ஊழியர்களே கடமைக்கு வருகிறார்கள். போக்குவரத்து வசதியின்மையால் மிகுதி ஊழியர்கள் வேலைக்கு வருவதில்லை.

இதன் காரணமாகப் போக்குவரத்து வசதிகள் செய்யப்படவுள்ளது.

ஏற்கவே மானிப்பாய், சுன்னாகம் பாதைகளில் போக்குவரத்துச் சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (153)

## இளைஞரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது.

மல்லாகம் நீதிமன்ற அகதி முகாம் தொண்டராகக் கடமையாற்றிவந்த இவரது மரணம் மர்மமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நேர்முகப் பரீட்சை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பாணத்திலும் நடத்தப்படுமெனக் கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் அறிவித்துள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளைக் கல்வி அமைச்சு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)

## தமிழகத்தின்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் படையின் ஒன்பது அணிகள் பாதுகாப்பு நடவடிக்கையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இப்பொலிஸார், ஏ. கே. 47 ரகத் துப்பாக்கி உட்படப் பல நவீன ஆயுதங்களுடன் இங்கு கடமையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## கருணாநிதி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. சுபேத்கான் சஹாயுடன் நேற்று பேச்சுக்கள் நடாத்தினார்.

இலங்கைத் தமிழர் விடயமாக தமிழக அரசு மேற்கொள்ள வேண்டியநடவடிக்கைகள் குறித்து இந்தியப் பிரதமரிடம் விளக்கிக்கூறிய பின்பே உள்துறை இணையமைச்சரைத் தாம் சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்தியதாக திரு. மு. கருணாநிதி பத்திரிகையாளரிடம் பேசுகையில் தெரிவித்தார். (க)

## இன்றைய கிரிக்கெட்

(புதுடில்லி)

இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையிலான 2-வது ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டி இன்று புனேயில் காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்.

கடந்தவாரம் நாக்பூரில் நடைபெற்ற முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (வி)

## தென் தமிழீழ

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

னர். அட்டைப்பள்ளம், வீரமுனை, கல்முனை 3ம் குறிச்சி போன்ற தமிழ்க்கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டன.

சிங்களப்படை, சிங்கள ஊர்காவற்படை, முஸ்லிம் காடையர்கள் ஆகியோரால் தென் தமிழீழ மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர்.

எந்த ஒரு சர்வதேச உதவி வழங்கும் அமைப்புக்களும் மக்களுக்கு உதவ முன்வரவில்லை. தமிழீழ மக்களுக்கு உதவ யாரும் கிடையாது. நாம்தான் எமக்கு உதவ வேண்டும்.

தமிழீழத்தில் எல்லோருமே இப்போரினால் பாதிப்படைந்துள்ளனர்.

தமிழீழத்தின் மீது பொருளாதாரத்தடையை விதித்து மக்களைப்பட்டினி போட்டு அடிபணியவைத்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழிக்கலாம் என சிங்கள அரசு எண்ணியது.

மக்கள் பட்டினியோடு வாழ்கின்றார்கள். பலர் பட்டினியால் இறக்கின்றார்கள். பல குழந்தைகள் உணவின்றி மருந்தின்றி இறக்கின்றன.

தமிழீழத்திற்கான போராட்டம் தீவிரமடைகின்றதே தவிர குறையவில்லை.

பட்டினியோடும் பெரும் அழிவுகளுக்கும் மத்தியிலும் நாம் பலமுறைகளில் போராடுகின்றோம்.

உணவு உற்பத்தியில் ஈடுபட்டோம், சிங்கள இராணுவ முகாம்களை அழிப்பதில் ஈடுபட்டோம். சிங்கள தேசத்தின் தங்கு நிலையில் இருந்து விடுபடத்தொடங்கினோம்.

தம்மில் தங்கியிருக்கும் நிலையில் இருந்து நாம் விடுபடுவதை விரும்பாத சிங்கள அரசு பொருளாதாரத் தடையை ஓரளவு நீக்கியுள்ளது.

மிகவும் பாதிப்படைந்துள்ள தென் தமிழீழ மக்களுக்கு வடக்கு வாழ் தமிழீழமக்கள் உதவ முன்வரவேண்டும். மம்மிடமுள்ள உணவுகளை, உடைகளை தென்தமிழீழ மக்களோடுபகிர்ந்து கொள்வோம்.

தமிழீழமக்கள் எல்லோரும் தமது வசதிகளுக்கு ஏற்றபுதிய உடையாக, உணவாக, பாத்திரங்களாக பணமாக தென் தமிழீழ மக்களுக்கு உதவவேண்டும்.

டிசம்பர் 10ம் திகதியில் இருந்து 20ம் திகதிவரை உங்கள் பகுதிகளுக்குஉதவி கேட்டு வரும் தொண்டர்களிடம் நீங்கள் தரவிரும்பும் பொருட்களை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

## வெள்ளை மாளிகையில் 'தீ'!

(வாஷிங்டன்)

வெள்ளை மாளிகையில் ஏற்பட்ட தீ உடனடியாக அணைக்கப்பட்டது. வெள்ளை மாளிகைக்கு வர்ணம் திட்டும்பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்த போது வர்ணக்கலவைகளில் ஏற்பட்ட இரசாயன மாற்றங்களால் இத்தீவிபத்து ஏற்பட்டது. தியை அணைக்க தியணைப்பு படையினர் உடனடியாக அழைக்கப்பட்டு தீ பரவாது தடுக்கப்பட்டது. (ச)

## பருத்தித்துறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தர் ஒருவரும் பதில் உயர் உத்தியோகத்தர் ஒருவரும் மேற்படி ஒய்விற்கான விண்ணப்பத்தை இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு அனுப்பியுள்ளதாகத் தெரியவருகின்றது. (51)

## மரண அறிவித்தல்

### திரு. மாணிக்கம் மணிவாசகம்

மண்டைதீவை பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. மா. மணிவாசகம் 2-12-90ல் தமிழ்நாட்டில் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-12-90ல் நடந்தேறின. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: சிவகுருநாதன்

மாப்பியன் லேன்,
சுதுமலை.

(சி 4165)

### திருமதி நாகலிங்கம் அன்னப்பிள்ளை

நெல்லண்டை பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி நாகலிங்கம் அன்னப்பிள்ளை 28-11-90 புதன்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் நாகலிங்கத்தின் (மயில்வாகன ஸ்ரோர்ஸ் கட்டுகஸ்தோட்டை) அன்பு மனைவியும், மயில்வாகனம், அன்னலிங்கம், விஜயரட்ணம், சந்தானலட்சுமி, இராமச்சந்திரன், பாலச்சந்திரன், ஜெயச்சந்திரன், ஜெயலட்சுமி, பாக்கியலட்சுமி, மங்களலட்சுமி ஆகியோரின் அருமைத் தாயாரும், காந்திமதி, மங்களேஸ்வரி, இராஜேஸ்வரி, பாலசுப்பிரமணியம், கெங்காதேவி, சித்தாதேவி, ஜெயதேவி, வல்லிபுரம், ராஜ்குமார், சூரியநாதன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் தும்பளை கேணியடி மயானத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்: மக்கள்

நெல்லண்டை,
பருத்தித்துறை.

(சி-4166)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் இதாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலக்கம் ... மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.